# திருவாரூரில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் வழங்கும் பணி

## கலெக்டர் வ.மோகனச்சந்திரன் நேரில் ஆய்வு



திருவாரூர்,நவ.05-

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டம், திருவாரூர் ஒன்றியத்துக்குட்பட்ட தண்டலை ஊராட்சி தியாகராஜர் நகரில் நியாய விலைக்கடை அருகில் வசிக்கும் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களுக்கு நகரும் வாகனத்தின் மூலம் அத்தியாவசிய பொருள்கள் வழங்கப்பட்டுவருவதை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அரசு வழங்கும் பல்வேறு திட்டங்களை மக்களின் வீடு தேடிச் சென்று செயல்படுத்தும் தமிழ்நாடு அரசின் சீரிய எண்ணத்தின் அடுத்த கட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் தாயுமானவர் திட்டத்தினை (12.08.2025) அன்று தொடங்கி வைத்தார்கள்;. பயனாளிகளின் இல்லத்திற்கே நேரடியாக சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட குடிமைப் பொருட்களை வழங்கும் திட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதுமுள்ள 21 லட்சத்து 70 ஆயிரத்து 454 மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்தோர்கள் பயனடைவார்கள்.

அதனடிப்படையில், இத்திட்டத்தின் மூலம் திருவாரூர் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் 714 ரேசன் கடைகள் மூலம் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று 363 எண்ணிக்கையிலான நகரும் வாகனங்களை கொண்டு அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம்பருப்பு, பாமாயில் உள்ளிட்ட ரேசன் பொருட்கள் விநியோகம் செய்யப்படவுள்ளது. இதனால் 34,197 எண்ணிக்கையிலான வயது முதிர்ந்த மற்றும் மாற்றுத்திறனாளி பயனாளிகள் பயனடையவுள்ளனர். இந்நிகழ்வில், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சித்ரா, உள்ளிட்ட அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிக்கான கணக்கெடுப்பு படிவம் வீடு வீடாக வழங்கும் பணி

## கலெக்டர் பொ.ரத்தினசாமி ஆய்வு



அரியலூர்,நவ.05-

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 01.01.2026-ஐ தகுதி ஏற்பு நாளாகக் கொண்டு அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட இரண்டு சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன்படி வாக்குசாவடி நிலை அலுவலர்களால் 04.11.2025 முதல் மாவட்டத்திலுள்ள அனைத்து வீடுகளுக்கும் சென்று வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டு வருகிறது. 149 அரியலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, பாகம் எண்.102 (கருப்பூர்சேனாபதி), 133 (வாரணவாசி), 134 (மல்லூர்) ஆகிய கிராமங்களில் கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டு வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் /கலெக்டர் பொ.இரத்தினசாமி, நேரில் ஆய்வு செய்தார்.

அதனைதொடர்ந்து பட்டியலில் உள்ள வாக்காளர்களுக்கு விடுபடாமல் கணக்கெடுப்பு படிவத்தினை வீடுவீடாக சென்று வழங்க வேண்டும் எனவும், வாக்காளர்களுக்கு படிவம் பூர்த்தி செய்தல் தொடர்பாக சந்தேகம் இருப்பின், வாக்காளர்களுக்கு போதிய உதவி செய்திட வேண்டும் எனவும், வாக்காளர் கணக்கெடுப்பு படிவம் விநியோகம் செய்ய உள்ள விபரத்தை வாக்காளர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும் எனவும், தகுதியுள்ள வாக்காளர் எவரும் விடுபடக்கூடாது எனவும், வாக்குசாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். பொதுமக்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்படும் கணக்கெடுப்பு படிவங்களை முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பத்துடன் ஒரு பிரதியினை வாக்குசாவடி நிலை அலுவலர்கள் மீள வரும் பொழுது சமர்ப்பித்திட வேண்டும். இப்பணிக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் குறைந்தது 3 முறை வாக்காளர்களின் வீடுகளுக்கு வருகை தருவார்கள் எனவும் பொதுமக்கள் இப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் மேற்கண்ட கணக்கெடுப்பு பணியில் 596 வாக்குசாவடி நிலை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனவும், அதனை மேற்பார்வையிட 10 வாக்குசாவடி நிலை அலுவலர்களுக்கு ஒருவர் வீதம் 60 மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் எனவும், இப்பணியினை சம்மந்தப்பட்ட உதவி வாக்காளர் பதிவு அலுவலர் / வருவாய் வட்டாட்சியர்களும், வாக்காளர் பதிவு அலுவலர் /வருவாய் கோட்டாட்சியர்களும் கண்காணிப்பார்கள் எனவும் மாவட்ட தேர்தல் அலுவலர் /கலெக்டர் பொ.இரத்தினசாமி, தெரிவித்தார்.

மேற்படி ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.த.பிரேமி, அரியலூர் வட்டாட்சியர் சு.முத்துலெட்சுமி, உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# கந்தர்வகோட்டையில் அதிமுக சார்பில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்



கந்தர்வகோட்டை,நவ.05-

கந்தர்வகோட்டையில் அதமுக சார்பில் BLA.2 வாக்குசாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனைத்து வாக்குச்சாவடி முகவர்களுக்கு ஆலோசனை கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் தலைமையில் நடைபெற்றது கூட்டத்திற்கு கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட குன்னாண்டார் கோவில் கந்தர்வகோட்டை கரம்பக்குடி ஆகிய ஒன்றியத்திற்கு உட்பட்ட வாக்குச்சாவடி முகவர்களுக்கு முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் ஆலோசனை வழங்கினார் அதனை தொடர்ந்து வாக்காளர்கள் சேர்ப்பது குறித்து ஆலோசனை வழங்கினார் நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நெடுஞ்செழியன் நார்த்தாமலை ஆறுமுகம் ஒன்றிய கழகச் செயலாளர்கள் பாண்டியன் கார்த்திக் குமார் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் மாவட்ட பிரதிநிதி கவிதா சிவா ஒன்றியஅம்மா பேரவை ஒன்றிய செயலாளர் ராஜ்குமார் மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் ஆனந்தகுமார் மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் பெரியசாமி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் விலாரிபட்டி முத்துக்குமார் அண்டனூர் ஊராட்சி மன்ற தலைவர் இளங்கோவன் ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் மங்கனூர் பாண்டியன் மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் காட்டு நாவல் சாமி மணிவண்ணன் மாவட்ட பாசறை இணைச் செயலாளர் அருண் பிரசாத் கந்தர்வகோட்டை முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வெங்கடேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான விண்ணப்பங்களை வீடு வீடாக வழங்கும் பணி

## கலெக்டர் ந.மிருணாளினி நேரில் ஆய்வு



பெரம்பலூர்,நவ.05-

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) – 2026க்கான பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்டம் முழுவதும் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான விண்ணப்ப படிவங்கள் வாக்காளர்களின் வீடு வீடாக வழங்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட துறைமங்கலம் மற்றும் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எசனை ஆகிய இடங்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) மூலம் வாக்காளர்களுக்கு வீடு வீடாக விண்ணப்ப படிவங்கள் வழங்கப்படுவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ கலெக்டர் ந.மிருணாளினி (04.11.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் 332 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளது. இந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு உட்பட்ட வாக்காளர்களுக்கு விண்ணப்ப படிவங்களை வழங்கும் பணியில் 108 அங்கன்வாடி பணியாளர்கள், 101 கிராம நிர்வாக அலுவலர்கள், 6 ஊராட்சி செயலர்கள், 68 சத்துணவு பணியாளர்கள், பிற அலுவலர்கள் 40 நபர்கள் என மொத்தம் 332 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோல குன்னம் சட்டமன்ற தொகுதியில் 320 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளது. இந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு உட்பட்ட வாக்காளர்களுக்கு விண்ணப்ப படிவங்களை வழங்கும் பணியில் 149 அங்கன்வாடி பணியாளர்கள், 121 கிராம நிர்வாக அலுவலர்கள், 1 ஊராட்சி செயலர், 42 சத்துணவு பணியாளர்கள், பிற அலுவலர்கள் 7 நபர்கள் என மொத்தம் 332 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணி 04.11.2025 முதல் 04.12.2025 வரை நடைபெறவுள்ளது. ஒவ்வொரு வாக்காளருக்கும் இரண்டு விண்ணப்ப படிவங்கள் வழங்கப்படும். கணக்கெடுப்பு படிவத்தில் நடைமுறையில் உள்ள வாக்காளர் பட்டியலில் பதிவாகியுள்ள பெயர், புகைப்படத்துடன் அனைத்து விவரங்களும் தலைப்பில் வழங்கப்பட்டு இருக்கும். அதன்பிறகு கோரப்பட்டிருக்கும் அனைத்து சுய விவரங்களையும் ஒவ்வொரு வாக்காளரும் நிரப்பிட வேண்டும்.

.இக்கணக்கெடுப்பு பணியினை உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள அந்தந்த வருவாய் வட்டாட்சியர்களும் 147. பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு வாக்காளர் பதிவு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ள பெரம்பலூர் வருவாய் கோட்டாட்சியரும் 148. குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு வாக்காளர் பதிவு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ள பெரம்பலூர் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரும் கண்காணித்திடுவார்கள். வாக்காளர்கள் இது தொடர்பாக தங்களுக்கு தேவையான விளக்கங்களை 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு விளக்கம் பெற்றுக்கொள்ளலாம். இந்நிகழ்வில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியர் அனிதா, உதவி வாக்காளர் பதிவு அலுவலர் / பெரம்பலூர் வட்டாட்சியர் பாலசுப்ரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருச்சி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி

## கலெக்டர் வே.சரவணன் நேரில் ஆய்வு



திருச்சி,நவ.05-

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் (04.11.2025) தொடங்கி நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியினை (ளுஐசு) மாவட்ட தேர்தல் அலுவலர்ஃ கலெக்டர் வே.சரவணன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்து பணிகளை சிறப்பான முறையில் மேற்கொள்ள ஆலோசனை வழங்கினார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 01.01.2026-ஐத் தகுதி ஏற்பு நாளாகக் கொண்டு தகுதியுள்ள நபர்கள் எவரும் வாக்காளர் பட்டியலில் விடுபடவில்லை என்பதையும், தகுதியற்ற நபர்கள் யாரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதையும் உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் 04.11.2025 அன்று முதல் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த களப்பணியில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 138 - மணப்பாறை சட்டமன்ற தொகுதியில் 324 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 139 - ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதியில் 339 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 140 - திருச்சிராப்பள்ளி மேற்கு சட்டமன்ற தொகுதியில் 270 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 141 - திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற தொகுதியில் 253 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 142 - திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதியில் 294 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 143 - இலால்குடி சட்டமன்ற தொகுதியில் 251 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 144 - மண்ணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதியில் 273 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 145 - முசிறி சட்டமன்ற தொகுதியில் 260 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 146 - துறையூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் 279 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் என மொத்தம் 9 சட்டமன்ற தொகுதிகளிலும் நியமனம் செய்யப்பட்டுள்ள 2543 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு பணியினை (04.11.2025) தொடங்கி மேற்கொண்டு வருகின்றனர்.

அதனடிப்படையில் 138 - மணப்பாறை, 139 - ஸ்ரீரங்கம், 140 - திருச்சிராப்பள்ளி மேற்கு 142 - திருவெறும்பூர், 143 - இலால்குடி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்கலெக்டர் வே.சரவணன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்து பணிகளை சிறப்பான முறையில் மேற்கொள்ள ஆலோசனை வழங்கினார்.

மேலும், முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த களப்பணிக்காக வாக்காளர்களின் வீடுகளுக்கு வருகை தரும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர்கள் தங்களது முழுமையான ஒத்துழைப்பினை நல்கிடுமாறு மாவட்ட தேர்தல் அலுவலர்ஃகலெக்டர் வே.சரவணன், கேட்டுக்கொண்டுள்ளார்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள்

## கலெக்டர் மு.அருணா நேரில் ஆய்வு



புதுக்கோட்டை,நவ.05-

புதுக்கோட்டை மாவட்டம், 179, விராலிமலை சட்டமன்ற தொகுதிகுட்;பட்ட குளத்தூர் வட்டம், களமாவூர் கிராமம், பாகம் எண்.42-ல் அண்ணாநகர் பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முறை பணிகளான வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், வாக்காளர்களின் இல்லத்திற்கு சென்று வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களை வழங்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்ஃ கலெக்டர் மு.அருணா, (04.11.2025) நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் ப.கோகுல்சிங், குளத்தூர் வட்டாட்சியர் அ.சோனைக்கருப்பையா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# கனரா வங்கி அதிகாரிகள் சங்கத்தின் 20வது முத்தாண்டுகள் மாநாடு

## வரும் 8ம் தேதி துவங்குகிறது

திருச்சி,நவ.05-

கனரா வங்கி அதிகாரிகள் சங்கத்தின் மூன்று நாட்கள் 20வது முத்தாண்டுகள் மாநாடு வரும் வரும் 8 -ம் தேதி முதல் ஆந்திரா மாநிலம் விசாகப்பட்டிணம் நகரில் உள்ள ரேடிசன் ப்ளு ஹோட்டலில் நடைபெற உள்ளது.

இத்தகவலை இந்திய வங்கி ஊழியர் கூட்டமைப்பின் முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் ஆர் . வெங்கடசுப்ரமணியன் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார். துவக்க விழாவில் கனரா வங்கியின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியுமான கே.சத்யநாராயண ராஜு கலந்து கொண்டு விழாவினை துவக்கி வைக்க இருக்கிறார். விழாவிற்கான ஏற்பாடுகளை மாநாட்டின் வரவேற்பு குழு தலைவர் ராமபிரசாத், சங்கத்தின் தலைவர் ராஜீவ் நிகாம், சேர்மன் ஜேக்கப் மற்றும் பொது செயலாளர் ரவிக்குமார் ஆகியோர் செய்து வருகின்றனர்.

# சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்த நாளை முன்னிட்டு நாகையில் மை பாரத் கேந்திரா இயக்கத்தின் சார்பில் பேரணி: வரும் 12ல் நடக்கிறது

நாகப்பட்டினம்,நவ.05-

சர்தார் வல்லபாய் பட்டேல் 150- வது பிறந்தநாளினை முன்னிட்டு நாகை மாவட்டம் கீழ்வேளூரில் மை பாரத் கேந்திரா இயக்கத்தின் வாயிலாக மாணவ- மாணவியர்கள் பங்கேற்கும் பிரமாண்டமான பேரணி வருகிற 12 –ந் தேதி நடைபெறுகிறது.இதையொட்டி பள்ளி,கல்லூரி மாணவ-மாணவியர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்படுகிறது.என மைபாரத் கேந்திரா இயக்கத்தின் இணை இயக்குனர்.நீலகண்டன் தெரிவித்தார்.

நாகையில் மை பாரத் கேந்திரா இயக்கத்தின் சார்பில் செய்தியாளர்கள் சந்திப்பு நடை பெற் றது. முன் ன தாக மைபாரத் கேந்திரா இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்த விளக்க உரை மற்றும் பதாகைகள் வெளியிடப்பட்டது.

இந்தியா ஒன்று, இந்தியா ஒன்று பட்டது,இந்தியா என்றென்றும் ஒற்றுமையாக இருக்கும். என்ற சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் உறுதியான நம்பிக்கையினை உலகிற்கு தெரிவிக்கும் வகையில் வளர்ந்த இந்தியாவினை உருவாக்கும் இலக்கை வெற்றியடையச் செய்ய பாரதபிரதமர் நரேந்திரமோதி முன்னெடுத்து பல்வேறு சீரிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

வருகிற 12 – பேரணி நடைபெறுகிறது.

இதையொட்டி பள்ளி,கல்லூரி மாணவ-மாணவியர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்படுகிறது.

பேரணியில் தேசியக் கொடியினை கையில் ஏந்தி ஆயி ரக் க ணக் க ணக் கான மாண வ-மா ண வி யர் கள் கலந்து கொள்கிறார்கள்.

வரலாற்றின் முக்கியத்துவம் 565 சமஸ்தானங்களை ஒன்றிணைத்து ஒற்றுமையினை நிலைநாட்டிய சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் வாழ்வியல் குறித்தும் எடுத்துரைக்கப்படுகிறது.இந்திய நாட்டின் பெருமைகளை பறைசாற்றும் இந்த பேரணி கீழ்வேளூர் முக்கியவீதிகள் வழியாக வலம் வந்து குருக்கத்தி அரசு வேளாண் அறிவியல் கல்லூரியினை சென்றடையும். இதில் பங்குபெறுபவர்களுக்காக பிரத்யோக அடையாள உடைகளும் வழங்கப்படும். சர்தார் வல்லபாய் பட்டேல் 150 வது பிறந்தநாளினை முன்னிட்டு இந்திய திருநாடு வருகிற நவம்பர் 25 –ந்தேதி வரையில் இதனை கொண்டாடி மகிழும் என்றார்.இந்த பேட்டியின் போது நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்தங்க.மோகன் உள்ளிட்ட மை பாரத் கேந்திரா இயக்கத்தினர் உடன் இருந்தனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக அதிமுகவினர் ஆலோசனை



அரியலூர்,நவ.05-

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக அரியலூரிலுள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் அதிமுக சார்பில் ஆலோசனைக் கூட்டம் திங்கள்கிழமை மாலை நடைபெற்றது.

கூட்டத்துக்கு, அக்கட்சியின் மாவட்டச் செயலரும், முன்னாள் அரசு தலைமைக் கொறடாவுமான தாமரை எஸ்.ராஜேந்திரன் தலைமை வகித்து பேசினர். கூட்டத்தில், மாநில அமைப்புச் செயலரும், அரியலூர் தொகுதி பொறுப்பாளருமான ஐ.மகேந்திரன் கலந்து கொண்டு பேசுகையில்,நவ.4 முதல், டிச.4 ஆம் தேதி வரை, எஸ்.ஐ.ஆர் வாக்காளர் பட்டியல் திருத்த முகாம் நடக்கிறது.

தற்போது தேர்தல் ஆணையமே அந்த திருத்தத்தை மேற்கொள்வதை வரவேற்கிறோம். அனைவரும் அதற்கு அதற்கு முழு ஒத்துழைப்பு தர வேண்டும்.

அதேபோல், அதிமுக பூத் கமிட்டி உறுப்பினர் ஒவ்வொருவரும், அரசு அலுவலருடன் சென்று, எந்த வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது. அதேபோல், போலி வாக்காளர்களை சேர்க்க கூடாது .

ஒவ்வொரு பூத்திலும் இறந்த வாக்காளர்களும், அடையாளம் தெரியாத வாக்காளர்களும், வெளியூர் சென்ற வாக்காளர்களும் பட்டியலில் உள்ளனர். அவற்றை நீக்க கூடாது என்பதற்காக, திமுகவினர் எஸ்ஐஆர்}ஐ எதிர்க்கின்றனர். எனவே அதிமுக}வினர் இந்த சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் பணியை உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும் என்றார்.

கூட்டத்தில், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் ஜெ.கே.என்.ராமஜெயலிங்கம், பொருளாளர் அன்பழகன், நகரச் செயலர் செந்தில், அம்மா பேரவை மாவட்டச் செயலர் சங்கர், இணைச் செயலர் பிரேம்குமார், அண்ணா தொழிற் சங்க மாவட்டச் செயலர் கல்லங்குறிச்சி பாஸ்கர் ஒன்றிய செயலாளர் பாலசுப்பிரமணியன் செல்வராஜ் மற்றும் அருங்கால் ஜோதிவேல் உள்ளிட்டோர் August கொண்டனர்.

# திருவாரூரில் நாளை மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் மோகனச்சந்திரன் தகவல்

திருவாரூர்,நவ.05-

திருவாரூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து அவர்களுக்கு தேவையான நலத்திட்ட உதவி குறித்த கோரிக்கை மனுக்கள் பெற்று தகுதியான கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் நாளை (6ந்தேதி) அன்று காலை 11 மணிக்கு திருவாரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலும்,நவம்பர் மாதம் 2ம் வியாழக்கிழமை (13ந்தேதி) அன்று காலை 11 மணிக்கு மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற இருக்கிறது. இந்த சிறப்பு குறை தீர்க்கும் கூட்டத்தில் திருவாரூர் கோட்டத்தை சார்ந்த மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டு அவர்களது கோரிக்கை மனுக்களை எழுத்து பூர்வமாக அளித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அன்றைய தினம்,மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் மீதான உள்ள கோரிக்கைகளுக்கு ஏற்ப உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் மனுக்கள் வழங்கப்படும்.மனுதாரர்களின் கோரிக்கைகள் அனைத்தும் அரசின் விதிகளுக்குட்பட்டு பரிசிலிக்கப்படுவதோடு,குறைகளுக்கு தீர்வு காணும் வகையில் உள்ள மனுக்களுக்கு உரிய உதவிகள் வழங்கிட தக்க நடவடிக்கை உடனடியாக மேற்கொள் ளப் ப டும்.மே லும், உதவி உபகரணங்கள், கடனுதவி, பராமரிப்பு உதவித்தொகை, வீட்டுமனை பட்டா, பட்டா இருப்பின் தொகுப்பு வீடு கோருபவர்கள்,நூறு நாள் அட்டை கோருபவர்கள் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்களும் அளிக்கலாம்.இதற்கு முன்னர் விண்ணப்பம் அளித்திருந்து அதற்கான ஆதாரம்,தொடர்புடைய கடிதங்கள் ஏதுமிருப்பின், அதனையும் தவறாது கொண்டு வர வேண்டும்.மேலும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு மாற்றுத்திறனாளிகள் அனைவரும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாளில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட கலெக்டர் மோகனச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

# நாகப்பட்டினம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிக்கான கணக்கெடுப்பு படிவம் வழங்கும் பணி: கலெக்டர் ஆய்வு

நாகப்பட்டினம்,நவ.05

நாகப்பட்டினம் மாவட்டம் 165-வேதாரண்யம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேதாரண்யம் நகராட்சி ஏரிக்கரை, தேரடி கீழவீதி, பூப்பட்டி. அண்டர்காடு கிராமம், கத்திரிப்புலம் ஆகிய கிராமங்களிலும், 164-கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேளாங்கண்ணி பேரூராட்சி கொய்யாதோப்பு ஆகிய பகுதியிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிக்கான கணக்கெடுப்பு படிவம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வாக்காளர்களுக்கு வீடு வீடாக வழங்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் ப.ஆகாஷ்நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். நாகப்பட்டினம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிக்கான கணக்கெடுப்பு படிவம் (நுரெஅநசயவழைn குழசஅ) (04.11.2025) முதல் வீடு வீடாக வாக்காளர்களுக்கு வழங்கும் பணிக்கு 653 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் 67 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான மேற்பார்வையாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு பயிற்சி அனைத்து தொகுதிகளிலும் அந்தந்த தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் போது வேதாரண்யம் சார் கலெக்டர் அமீத் குப்தா, வேதாரண்யம் வட்டாட்சியர் ராஜா, மற்றும் அரசு அலுவலர்கள் உடன் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி

## கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீ காந்த் ஆய்வு

மயிலாடுதுறை,நவ.05-

மயிலாடுதுறை மாவட்டம்;, மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மன்னம்பந்தல் ஊராட்சி, சீர்காழி; சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் ஊராட்சி மற்றும் பூம்புகார் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆறுபாதி ஊராட்சிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளான வாக்காளர்களுக்கு வீட்டிற்கு நேரடியாக சென்று, கணக்கீட்டு படிவம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்படுவதை மாவட்ட கலெக்டர்/மாவட்ட தேர்தல் அலுவலர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அதன்படி, இந்திய தேர்தல் ஆணையம், 01.01.2026-ஐ தகுதிநாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளது. அதன்படி, மயிலாடுதுறை மாவட்டத்தில், முதல் 04.12.2025 வரை வாக்காளர் வீட்டிற்கே நேரடியாக சென்று வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கும் பணி நடைபெறுகிறது. இப்பணியில், மயிலாடுதுறை மாவட்டத்தில், 862 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வாக்காளர் படிவங்களை வழங்கி பூர்த்தி செய்த விண்ணப்பங்களை பெற்று வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதை உறுதி செய்யும் பணிகள் நடைபெறும். இக்கணக்கெடுப்பு பணிகள் முடிவுற்று வரைவு வாக்காளர் பட்டியல் 09.12.2025 அன்று வெளியிடப்படும். மேலும் பொதுமக்கள் இணையதள முகவரியை பயன்படுத்தி இறுதியாக நடைபெற்ற சிறப்பு தீவிர திருத்தம் 2002 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை பார்வையிட்டு தங்கள் பெயர் இடம் பெற்றுள்ள விவரங்களை அறிந்துக் கொள்ளலாம். அதுமட்டுமில்லாமல், இப்பணியில் பொது மக்கள் ஏதேனும் சந்தேகங்கள் மற்றும் புகார்கள் இருப்பின், மாவட்ட அளவில் - தேர்தல் கட்டுப்பாட்டு அறை, மாவட்ட கலெக்டர் அலுவலகம், மயிலாடுதுறை. (1950 என்ற எண்ணையும்), 160.சீர்காழி (தனி) - வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சீர்காழி (04364 – 270222 என்ற எண்ணையும்), 161.மயிலாடுதுறை - வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மயிலாடுதுறை. (04364 – 222033 என்ற எண்ணையும்), 162.பூம்புகார் - உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், தரங்கம்பாடி. (04364 – 289439 என்ற எண்ணையும்) தொடர்பு கொள்ளலாம். , மாவட்ட கலெக்டர் அவர்களால் வாக்காளர் அலுவலர்களால் வழங்கப்படும் கணக்கெடுப்பு படிவங்களை பார்வையிட்டு, வழங்கப்படும் படிவங்கள் குறித்து கேட்டறிந்தார்கள். வாக்காளர்களுக்கு வழங்கப்படும் படிவம் எவ்வாறு பூர்த்தி செய்வது என்பது குறித்தும் கேட்டறிந்து, விவரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மாவட்ட கலெக்டர் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். இவ்வாய்வின்போது, உதவி ஆணையர் (கலால்) .மாணிக்கராஜ்;, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் .சுரேஷ், மயிலாடுதுறை வட்டாட்சியர் .சுகுமாரன், சீர்காழி வட்டாட்சியர் அருள்ஜோதி, தரங்கம்பாடி வட்டாட்சியர் .சதீஷ்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.



ஒன்றிய அரசின் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த பணிகளை நாகை மாவட்டம் திருமருகல் வடக்கு ஒன்றியம் புத்தகரம் ஊராட்சியில் திருமருகல் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் செல்வ செங்குட்டுவன் ஆய்வு செய்தார். உடன் மாவட்ட அயலக அணி துணைத்தலைவர் ஆர்.விஜயகணபதி, பாஸ்போர்ட் சேகர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# திருவாரூரில் அதிமுக பாகநிலை முகவர்கள் கூட்டம் ஆர்.காமராஜ் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது



திருவாரூர்,நவ.05-

திருவாரூர் நாகை பைபாஸ் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட அதிமுக பாக நிலை முகவர்கள் கூட்டம் முன்னாள் அமைச்சரும்,கழக அமைப்பு செயலாளருமான ஆர்.காமராஜ் எம்எல்ஏ தலைமையில் நேற்று முன்தினம் நடைப்பெற்றது.இதில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நன்னிலம்,திருவாரூர்,மன்னர்குடி, திருத்துறைப் பூண்டி ஆகிய தொகுதிகளில் உள்ள அனைத்து பாகநிலை முகவர்கள் கலந்து கொண்டனர்.இவர்களுக்கு எஸ்ஐஆர் சட்டம் பற்றியும்,அதனை எவ்வாறு நமது முகவர்கள் கையாள வேண்டும் எனபதை குறித்து விளக்கப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் அமைப்பு கழக செயலாளர் சிவராஜமாணிக்கம், தேர்தல் மாவட்ட பொறுப்பாளர் இளவரசன்,மாவட்ட பொருளாளர் ஏஎன்ஆர் பன்னீர்செல்வம்,நகர செயலாளர்கள் ஆர்.டி.மூர்த்தி,ஆர்.ஜி.குமார்,ஒன்றிய செயலாளர்கள் பாப்பாசுப்ரமணியன்,மணிகண்டன,செந்தில்வேல்,ஜெ பேரவை மாநில துணை செயலாளர் எம்.ஆர்.பாலாஜி,மாவட்ட அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர் கலிய பெருமாள்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சின்னராஜ் உள்ளிட்ட அனைத்து நகர,ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள்,துணை தலைவர்கள், கிளை செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். பின்னர் முன்னாள் அமைச்சர் ஆர்.காமராஜ் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது, கடந்த காலங்களில் இறந்தவர் வாக்கு அப்படியே உள்ளது.அதை சரி செய்ய வேண்டும் இதற்கு முன்னால் வந்த வாக்காளர் பட்டியலில் நாங்கள் எழுதிக் கொடுத்த பெயர்களை ஏதும் நீங்க வில்லை.அதுபோல நிரந்தரமாக வெளியூர் சென்றவர்கள் பெயரும் நீங்க வில்லை.இதை எல்லாம் சரி செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது எஸ்ஐஆர் திட்டம் மூலம் இந்த வாக்குகள் நீக்கப்படும் என்று நினைக்கிறேன்.இதனை அதிமுக முழுமையாக பயன்படுத்தி சரியான வாக்காளர்களை தேர்தெடுக்க வேண்டும் என்பதே எங்களது நோக்கம்.அவ்வாறு சரியான வாக்குகள் இருந்தால் அதிமுக வெற்றி பெற எந்த கட்சியாலும் முடியாது.திமுக எங்களுடன் போட்டி போட முடியாது.எங்களது கூட்டணி அதிமுக பிஜேபி கூட்டணி பலமாக உள்ளது.கூட்டணி பற்றி பேசுபவர்கள் கூடிய விரைவில் அதைப் பற்றி புரிந்து கொள்வார்கள்.அதிமுக ஆட்சியில் அமர வேண்டும் எடப்பாடியார் முதலமைச்சராக பதவி ஏற்க வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள்.எட்டே முக்கால் ஆண்டுகள் அண்ணா திமுகவை கட்டுக்கோப்பாக கொண்டு வந்தவர் எடப்பாடி பழனிச்சாமி அவரைப் பற்றி வெளியில் போனவர்கள் பேசுவதற்கு எந்த அருகதையும் கிடை யாது.ஜெயலலிதா இறப்புக்கு பின்னர் கடுமையான உழைப்பின் மூலம் கட்சியை தனது கட்டுக்கோப்பில் கொண்டு வந்தவர் எடப்பாடி பழனிச்சாமி. அப்படிப்பட்டவரை பார்த்து யாரும் பொறாமை படக்கூடாது. தொண்டர்கள் மக்கள்,பொது மக்கள்,நிர்வாகிகள் என அனைவரும் எடப்பாடி பக்கம் உள்ளனர்.அவர் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் சரியாக தான் இருக்கும் என்று இயக்கத்தினர்கள் நம்புகின்றனர்.இயக்கத்தில் உள்ளே இருந்து கொண்டு இயக்கத்தைப் பற்றி தவறாக பேசினால் பொதுச் செயலாளர் பொறுத்துக்கொள்ள மாட்டார் அதனால்தான் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனை கட்சி இருந்து நீக்கினார்.

தேர்தல் நேரத்தில் இது போன்று அனைவரும் கட்டுக்கோப்பாக இல்லாமல் தவறாக பேசுவது மன்னிக்க முடியாது.எடப்பாடியார் மதுரையில் பேட்டியளிக்கும் போது தெளிவாக கூறுகையில் நாங்கள் தவெகவுடன் கூட்டணி பேசவில்லை அவர்களும் எங்களுடன் கூட்டணி குறித்து பேசவில்லை இந்த தேர்தலை பொருத்தவரை அதிமுக வலுவான நிலையில் உள்ளது அதிமுக,பிஜேபி கூட்டணி மிக அருமையாக உள்ளதால் வரும் 2026ம் ஆண்டு நடைபெறும் சட்டமன்ற தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி கழக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் ஆட்சி அமையும் எனறார்.

**போக்குவரத்து விதிகளை மதிக்கவும்**

# பேசின்பாலம் பகுதியில் சிக்கன் கடை ஊழியர் மீது தாக்குதல்: ஒருவர் கைது

சென்னை நவ 05-

சென்னை, புளியந்தோப்பு, ஆடுதொட்டி, 8வது தெருவில் வசித்து வரும் முகமது கான், என்பவர் கே.பி பார்க், மோதிலால் தெரு சந்திப்பில் உள்ள சிக்கன் கடையில் வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 2 ந் தேதி அன்று இரவு, மேற்படி சிக்கன் கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த தெரிந்த நபரான மணிகண்டன் மற்றும் அவரது நண்பர் உட்பட இருவர் சேர்ந்து, மேற்படி முகமதுகானிடம் பணம் கேட்டுள்ளனர். முகமதுகான் பணம் தர மறுக்கவே, அவரை தகாத வார்த்தைகள் பேசி, கையால் தாக்கி, சிக்கன் கடையின் கல்லாவில் வைத்திருந்த பணம் ரூ.135/-ஐ எடுத்துக் கொண்டு, கடையில் கறி வெட்ட வைத்திருந்த கத்தியைக் காட்டி மிரட்டி, அங்கிருந்து இருவரும் தப்பிச் சென்றனர். இச்சம்பவத்தில் இரத்த காயமடைந்த முகமதுகான் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மேற்படி சம்பவம் குறித்து, கொடுத்த புகாரின்பேரில், பேசின்பாலம் காவல் நிலையத்தில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.பேசின்பாலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி மணிகண்டன், என்பவரை கைது செய்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**காவல்துறை அறிவிப்பு**

புதுக்கோட்டை மாவட்டம் பனையப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 135/2021 U/S 294(B) 324,506(2) IPC எதிரி சிவகுமார் S/o.சின்னக்கண்ணு, தீபாஞ்சம்மன் கோவில் தெரு, செவலூர் (Po), பொன்னமராவதி (Tk), புதுக்கோட்டை மாவட்டம் என்பவர் மீது பனையப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 135/2021 U/S 294(B), 324,506(2) IPC வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணைக்கு பிறகு மேற்படி எதிரி மீது திருமயம், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் CCNO:67/22 இன் படி வழக்கு விசாரணையில் இருந்து வந்த நிலையில் மேற்படி எதிரி தொடர்ந்து நீதிமன்றம் ஆஜராகாததால் நீதிமன்றம் அவரை தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்க வரும் 17.11.2025–ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே மேற்படி எதிரியாகிய குற்றவாளியாகிய நீங்கள் 17.11.2025 ஆம் தேதியில் காலை 10:30 மணிக்கு அல்லது அதற்கு முன்னரோ திருமயம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தவறாமல் ஆஜராக கூறப்படுகிறது. தவறும் பட்சத்தில் நீங்கள் பிரகனப்படுத்தப்பட்ட குற்றவாளியாக அறிவிக்கப்படுவீர்கள் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

காவல் ஆய்வாளர்,
பனையப்பட்டி காவல் நிலையம்
காவல் ஆய்வாளர் : 90470 21822
பனையப்பட்டி காவல் நிலையம் : 94981 00758.

**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், பெரம்பலூர்.**
**அ.வ.எண். 153/2020**
**EP.NO. 65/2022.**

N.பத்மா. 45/2018,
க/பெ.நடேசன்,
22. சிறுமத்தூர்,
முருக்கன்குடி அஞ்சல்,
குன்னம் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம்.
– மனுதாரர்
/எதிர்/
முத்துலட்சுமி,
க/பெ.கருப்பையா,
ஆனந்தவாடி கிராமம்,
செந்துறை வட்டம்,
அரியலூர் மாவட்டம்.
– 5–ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு:
இந்த நம்பர் மனுதாரர். எதிர்மனுதாரர்கள் பேரில் வாகன விபத்து நஷ்டஈடு கோரி தாக்கல் செய்த மேற்படி மனுவில், 5–ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய நோட்டீஸ் பலதடவைகள் போயும் சர்வு ஆகாமையால் மேற்படி 5–ம் எதிர்மனுதாரருக்கு அனுப்ப வேண்டிய நோட்டிசை பேப்பரில் விளம்பரம் செய்ய உத்தரவாகி 13.11.2025–ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் அன்று சமூகம் நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன்மூலம் தங்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

G.குமரவேலன் B.A , B.L,
R.அற்புதம். M.B.A , , L,L,B,
G.அஜித் B.A.,LL.B.,
வழக்கறிஞர்கள், பெரம்பலூர்.

**மாண்புமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரம்பலூர்.**
**O.S.No.31/2022 & IA.No.2/2022**

சுவக்கின் சுகானந்தம்,
த/பெ.இஞ்ஞாசி முத்து, கிருஸ்தவர்,
1/396 கோகுலம் காலனி,
NO:1 டோல்கேட்,
பிச்சாண்டார் கோவில் தெரு,
மண்ணச்சநல்லூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.
– மனுதாரர்/வாதி
/எதிர்/
ஆரோக்கியசாமி,
த/பெ சவரிமுத்து,
முகம்மது பட்டினம்,
அன்னமங்கலம் கிராமம்,
பெரம்பலூர் மாவட்டம்.
2. லீமாரோஸ் தெரஸ்
த/பெ.பீட்டர்,
க/பெஅன்தோனி இருதராஜ்,
நடுத்தெரு, கதவு எண்.3/78/1
அன்னமங்கலம் கிராமம்,
வேப்பந்தட்டை வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம்.
– R4.R9/D4.D9 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

அறிவிப்பு:
மேற்படி வழக்கில் தங்களுக்கு பலமுறை நீதிமன்றத்தின் மூலம் IA.No.2/2022ல் அறிவிப்பும் அ.வ.எண். 33/2022ல் சம்மனும் சார்வு செய்ய முயற்ச்சித்தும் தாங்கள் அவைகளை தவிர்த்து வருகிறீர்கள். ஆதலால் இந்த பேப்பர் விளம்பரம் மூலம் சம்மன் மற்றும் அறிவிப்பு வழங்கப்படுகிறது. ஆகவே மேற்படி வழக்கு அ.வ.எண்.33/2022 மற்றும் அதில் IA.No.2/2022-ன் வாய்தா 12.11.2025–ல் மேற்படி நீதிமன்றத்தில் போடப்பட்டுள்ளது. அதில் தங்களுக்கு ஏதும் ஆட்சேபனை இருப்பின் 12.11.2025–ல் காலை 10.30 மணிக்குள் நேரடியாகவோ, வழக்கறிஞர் மூலமோ மாண்புமிகு நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்தக்கொள்ள வேண்டியது. தவறினால் ஒரு தலைபட்சமாக மேற்படி மனு தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்/வாதியின் வழக்குரைஞர்
G.SUBRAMANIAN, M.A,, B.L
ADVOCATE & NOTARY PUBLIC
PERAMBALUR-621 220.

**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், பெரம்பலூர்.**
**அ.வ.எண். 153/2020**
**EP.NO. 65/2022.**

மணி,
க/பெ.சீமான்,
கொட்டக்காடு, வேப்பூர் கிராமம்,
குன்னம் வட்டம்
பெரம்பலூர் மாவட்டம்.
– வாதி
/எதிர்/
ரமேஷ், த/பெ.தங்கவேல்,
தெப்பக்குளம் பாதை,
வேப்பூர் கிராமம்,
குன்னம் வட்டம்
பெரம்பலூர் மாவட்டம்
– பிரதிவாதி

அறிவிப்பு:
வாதி / மனுதாரர் கிரைய பத்திரம் எழுதி தர வேண்டி மனு செய்து பலமுறை தங்களுக்கு நோட்டீஸ் அனுப்பியும் அதை தாங்கள் தவிர்த்து வருவதால் இதன் மூலம் தங்களுக்கு பேப்பர் விளம்பரம் அறிவிப்பு அளிக்கப்படுகிறது. மேற்படி EP.NO.65/2022 வின் வாய்தா 11.12.2025–க்கு போடப்பட்டுள்ளது. அதில் தங்களுக்கு எந்தவித ஆட்சேபனை இருப்பின் 11.12.2025 காலை 10.30 மணிக்குள் மாண்புமிகு நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது, தவறினால் ஒரு தலைபட்சமாக மேற்படி மனு தீர்மாணிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்/வாதியின் வழக்குரைஞர்
G.SUBRAMANIAN, M.A,, B.L
ADVOCATE & NOTARY PUBLIC
PERAMBALUR-621 220.

**மாண்புமிகு மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், குளித்தலை**
**MCOP.No.273/2017**

K.முஸ்தபா,
த/பெ.காதர்மொய்தீன்,
பாரதியார் தெரு,
அம்மாக்குளம்,
அரியமங்கலம், திருச்சி.
– மனுதாரர்
– எதிர் –
M.கிரி,
த/பெ.மருதமுத்து,
எண்.418, மாரியம்மன் கோவில் தெரு, திருச்சி.
– 1–ம் எதிர்மனுதாரர்

1–ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு
சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில் 1–ம் எதிர்மனுதாரராகிய உமக்கு நீதிமன்றத்தின் மூலம் பலமுறை சம்மன் அனுப்பியும் உமக்கு சார்வு ஆகாத காரணத்தால் இந்த விளம்பர அறிவிப்பு கொடுக்க உத்தரவாகியுள்ளது. மேற்படி வழக்கின் வாய்தா வரும் 06.01.2026–ம் தேதி போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் நீர் சமூகம் நீதிமன்றத்தில் காலை 10.30 மணியளவில் நேரிலோ அல்லது உமது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி உமது தரப்பினை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் உமக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக வழக்கு தீர்மானிக்கப்படும் என்பதனை அறியவும்.

R.கார்த்திகேயன், M.A.,B.L.,
வழக்கறிஞர்/நோட்டரி பப்ளிக்,
குளித்தலை.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் திண்டுக்கல்**
**ஓ.எஸ்.எண். 32 / 2024**

ஜெகதாம்பாள் வகையறா
...... வாதிகள்
//எதிரிடை//
1. திரு.T.பெருமாள்
த/பெ.லேட் தங்கவேல்
இலக்கம்:-36 / 68
பெருமாள்கோவில் தெரு.
மேற்கு சைதாப்பேட்டை,
சென்னை-15.
2. திருமதி.A.K.M.ஹருன்னிஸா
க/பெ. முகம்மது கௌஸ்
LIC-303,போலீஸ் காலனி,
அண்ணாநகர் அஞ்சல்,
திருச்சி-26.
.... 3, 4 பிரதிவாதிகள்

பொது அறிவிப்பு
சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி நிர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. தற்பொழுது அசல் வழக்கு வருகின்ற 20.11.2025 ஆம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் ஷை நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு தாங்கள் நேரிலோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்கள் தரப்பு ஆட்சேபனையை தெரிவிக்கவும், தவறினால் தங்கள் மீது ஒருதலைபட்சமாக வழக்கு தீர்மானிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

A.SELVAM MA.ML, DLLAL, PGDJMC,
ADVOCATE & NOTARY
DINDIGUL.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்**
**த.ப. 586/2025**
**நாள் : 22.09.2025**

முகம்மது சுஜாபு,
த/பெ.முகம்மது சித்திக்,
பள்ளிவாசல் தெரு,
திருநறையூர்,
கும்பகோணம்.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது பாட்டி "உம்மசல்மா பீவி" என்பவர் கடந்த 26.07.2012 அன்று திருநறையூர் கிராமம் என்ற முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

முகம்மது சுஜாபு,
மனுதாரர், கும்பகோணம்.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்**
**த.ப. 587/2025**
**நாள் : 22.09.2025**

முகம்மது சுஜாபு,
த/பெ.முகம்மது சித்திக்,
பள்ளிவாசல் தெரு,
திருநறையூர்,
கும்பகோணம்.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தாத்தா "ஹாஜி முகமது" என்பவர் கடந்த 10.04.1988 அன்று திருநறையூர் கிராமம் என்ற முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

முகம்மது சுஜாபு,
மனுதாரர், கும்பகோணம்.

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதி மன்றம், சார் ஆட்சியர், வேதாரண்யம்,**
**ஓ.மு.COLRV.5022/2025/அ2**

செபஸ்திகண்ணு, த/பெபிரான்ஜீஸ்,
262-மாதாகோவில்தெரு,
களத்திடல்கரை, மடப்புரம் கிராமம்,
திருக்குவளை வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.
...மனுதாரர்
உயர்திரு. வட்டாட்சியர், அவர்கள்,
திருக்குவளை ....எதிர்மனுதாரர்

அறிவிப்பு
மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் தனது தாயார் சிந்தாதுரைமேரி, க/பெ பிரான்ஜீஸ் என்பவர் கடந்த 17.06.2008-ம் தேதி அன்று இறந்த விபரத்தை பதிவு செய்திடக் கோரி வேதாரண்யம் சார் ஆட்சியர் அவர்களிடம் மனு அளித்துள்ளார் இந்த மனுவின் மீது யாருக்கேனும் ஆட்சேபணை ஏதாவது இருப்பின் 15 நாட்களுக்குள் தங்களது ஆட்சேபணைகளை திருக்குவளை வட்டாட்சியரிடம் தெரிவிக்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது.

மனுதாரர்: செபஸ்திகண்ணு,
த/பெபிரான்ஜீஸ்,
262-மாதாகோவில்தெரு,
களத்திடல்கரை, மடப்புரம் கிராமம்,
திருக்குவளை வட்டம்,

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் சீர்காழி**

குமார், த/பெ.செல்வராஜ்,
மாரியம்மன்கோயில் தெரு,
22முடிகண்டநல்லூர் கிராமம்,
தரங்கம்பாடி வட்டம்,
மயிலாடுதுறை வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம்.
– மனுதாரர்
வருவாய் கோட்டாட்சியர்,
சீர்காழி.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தந்தை "செல்வராஜ்" த/பெ. வேலாயுதம் என்பவருக்கு இறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் வசித்தவர் கடந்த 22.08.2012 ஆண்டு மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

குமார், மனுதாரர்,
சீர்காழி வட்டம்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மயிலாடுதுறை**

சோமசுந்தரம், த/பெ.ராஜாங்கம்,
மாதாகோயில்தெரு,
கற்கோயில் கிராமம்,
வைதீஸ்வரன்கோயில்
சீர்காழி வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம்.
– மனுதாரர்
வருவாய் கோட்டாட்சியர்,
மயிலாடுதுறை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தாய் "தாயாா்" க/பெ. ராஜாங்கம், என்பவருக்கு இறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் வசித்தவர் கடந்த 19.07.2015 ஆண்டு மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

சோமசுந்தரம், மனுதாரர்,
மயிலாடுதுறை வட்டம்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மயிலாடுதுறை**

கமலா,
க/பெ.கண்ணன்,
சிவன்கோயில்மேல தெரு,
திருமேனியார்கோயில்,
கடலங்குடி கிராமம்,
மயிலாடுதுறை மாவட்டம்.
– மனுதாரர்
வருவாய் கோட்டாட்சியர்,
மயிலாடுதுறை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தாயார் "மங்களம்" க/பெ.மணி என்பவருக்கு இறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் வசித்தவர் கடந்த, 03.04.1990 ஆண்டு மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

கமலா, மனுதாரர்,
மயிலாடுதுறை வட்டம்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மயிலாடுதுறை**

கலைவேந்தன், த/பெ.சேகர்,
சிவன்கோயில்மேல தெரு,
திருமேனியார்கோயில்,
மாந்தட்டை, 13.மேக்கிரிமங்கலம் கிராமம், குத்தாலம் வட்டம்
மயிலாடுதுறை மாவட்டம்.
– மனுதாரர்
வருவாய் கோட்டாட்சியர்,
மயிலாடுதுறை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தந்தை "சேகர்" த/பெ.கதிர்வேல் என்பவருக்கு இறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் வசித்தவர் கடந்த 21.12.1995 ஆண்டு மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

கலைவேந்தன், மனுதாரர்,
மயிலாடுதுறை வட்டம்.

**ஸ்ரீராமபுரம் முதல்நிலை பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்**
**2025–2026 (SADP) சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம்**

ந.க.எண்.293/2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை நாள்: 30.10.2025

திண்டுக்கல் மாவட்டம், ஸ்ரீராமபுரம் முதல்நிலை பேரூராட்சியில் 2025–2026 SADP சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 17.11.2025ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை இணையதளத்தின் மூலமாக தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இணையதளத்தின் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இணையதளத்தின் மூலம் பரிசீலிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 14.11.2025 ஆம் தேதி மாலை 5.30 மணி வரை https://tntenders.gov.in என்ற வலைதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

வேலையின் பெயர்: ஸ்ரீராமபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியான 11வது வார்டு சங்கரலிங்கபுரம் முதல் பெரியகோம்பை டேம் வரை தடுப்புச்சுவருடன் கூடிய தார்சாலை அமைத்தல். மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்: 146.00; முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் : 146000; ஒப்பந்ததாரரின் தகுதி : Class – I

1. செலுத்தப்பட வேண்டிய முன்வைப்பு தொகையினை "Directorate of Town Panchayats / Dindigul Zone / Sriramapuram Town Panchayat" என்ற தலைப்பில் செலுத்தப்பட்டதற்கான சலான் இணைக்கப்பட வேண்டும். 2. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட இதர நிபந்தனைகளை ஸ்ரீராமபுரம் முதல்நிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். 3. இத்திட்டம் கட்டுமானப்பணி முடிக்கப்பட்டவுடன், ஐந்தாண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு கட்டுமானம் பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்தச் செலவில் சீரமைத்து தரவேண்டும்.

திருமதி. க. கல்பனா, செயல் அலுவலர், ஸ்ரீராமபுரம் முதல் நிலை பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்.
செ.ம.தொ.இ / 5972 / ஒப்பந்தப்புள்ளி / 2025
திருமதி. அ. சகிலா, தலைவர், ஸ்ரீராமபுரம் முதல் நிலை பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்.

**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் / திருவாரூர் உள்ளூர் திட்டக் குழுமம் திருவாரூர்.**

அறிவிப்பு
இணையதள விண்ணப்ப எண்.7YY2FS3G (6333/2025 TVR) நாள். 10.2025

திரு.R.ரமேஷ், த/பெ.ராமசாமி மற்றும் ஒருவர் 1/143, ராம் நகர் தெற்கு, கேவிபி குடியிருப்பு அருகில், சேலம் பைபாஸ் ரோடு, ஆண்டாங்கோவில் கிழக்கு, இனாம் கரூர், கரூர் மாவட்டம்– 639 006 அவர்களால் கீழ் குறிப்பிட்டுள்ள புல விபரத்தினை அரசாணை நிலை எண்.133, வீ.வ.(ம) ந.பு.வ. (UD4-2) துறை நாள். 21.04.2005–ல் மறுஆய்வு இணக்கம் அளிக்கப்பட்ட திருவாரூர் முழுமைத் திட்டத்தில் விவசாய உபயோக பகுதியாக (AG27) உத்தேசிக்கப்பட்டுள்ள கீழ்கண்ட புலத்தினை குடியிருப்பு உபயோக பகுதியாக மாற்றம் செய்திட கோரப்பட்டது.

புல விபரம்:
திருவாரூர் மாவட்டம், திருவாரூர் வட்டம், திருவாரூர் ஊராட்சி ஒன்றியம், கீழக்காவாதுக்குடி ஊராட்சி, திருவாரூர் தெற்குசேத்தி கிராமம், புல எண்.22/1B, பரப்பளவு 8650.00 ச.மீ. (0.86.50 ஹெக்டேர்).

மறுஆய்வு இணக்களிக்கப்பட்ட திருவாரூர் முழுமைத் திட்டத்தில் விவசாய உபயோக பகுதியாக (AG 27) உத்தேசிக்கப்பட்டுள்ளதனை குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்வது தொடர்பாக ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதேனும் இருப்பின் இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 தினங்களுக்குள் உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் / திருவாரூர் உள்ளூர் திட்டக் குழுமம், அறை எண்.306, 307, 308 (3–வது தளம்), இணைப்பு கட்டிடம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர்– 610 004 என்ற முகவரிக்கு எழுத்து மூலமாக தெரியப்படுத்தலாம் என பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் /
திருவாரூர் திட்ட குழுமம்,
திருவாரூர்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வெ.ஆ.எண்.105/செ.ம.தொ.அ/2025/திருவாரூர். நாள்: 04.11.2025.

